செ.வெ.எண் -52 நாள்-17.11.2023

**கோயம்புத்தூர் மாவட்டம்**

**தமிழ்நாடு அரசின் துணிநூல் துறை, ஒன்றிய அரசின் ஜவுளித் துறை மற்றும் இந்திய தொழில் கூட்டமைப்பு(CII) ஆகியவை இணைந்து நடத்திய தொழில்நுட்ப ஜவுளி கருத்தரங்கு மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திரு. ஆர். காந்தி அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

---

**கோயம்புத்தூர் மாவட்டம், ஹோட்டல் லீ மெரிடியனில் தமிழ்நாடு அரசின் துணிநூல் துறை, ஒன்றிய அரசின் ஜவுளித் துறை மற்றும் இந்திய தொழில் கூட்டமைப்பு(CII) ஆகியவை இணைந்து நடத்திய தொழில்நுட்ப ஜவுளி கருத்தரங்கு இன்று**(17.11.2023) மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திரு.ஆர்.காந்தி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கருத்தரங்கில் ஒன்றிய ஜவுளித்துறை அமைச்சக இணைச் செயலர் திரு.ராஜீவ் சக்சேனா, இ.ஆ.ப., துணிநூல் மற்றும் கதர்த்துறை அரசு முதன்மைச் செயலர் திரு.D.P.யாதவ், இ.ஆ.ப., ஒன்றிய ஜவுளித்துறை ஆணையர் திருமதி.ரூப்ராசி, இ.ஆ.ப., ஆந்திரப்பிரதேச கைத்தறி மற்றும் துணிநூல் துறை, அரசு முதன்மைச் செயலர் திருமதி.சுனிதா, இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு கைத்தறி, கைத்திறன், துணிநூல் ஆணையர் முனைவர் மா.வள்ளலார், இ.ஆ.ப., ஒன்றிய ஜவுளித்துறை அமைச்சக இயக்குநர் திரு.அனில்குமார் IRS, இந்திய தொழில் கூட்டமைப்பு தலைவர் திரு.சங்கர்வானவராயர், இந்திய தொழில் கூட்டமைப்பு ஒருங்கிணைப்பாளர் (டெக்ஸ்டைல்ஸ்) திரு.கோபிகுமார், சேர்மன் (PNP Polymers) திரு.பவன்குமார்கௌசிக், ஒன்றிய ஜவுளித்துறை அமைச்சக துணைச்செயலர் திரு.பிரசாந்த் குமார் மீனா, President FIEO திரு.சக்திவேல், கைத்தறி ஏற்றுமதி அபிவிருத்தி கழக சேர்மன் திரு.கோபாலகிருஷ்ணன், மற்றும் கைத்தறி மற்றும் துணிநூல் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**இக்கருத்தரங்கில் மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திரு.ஆர். காந்தி அவர்கள் பேசியதாவது,**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதல்களுக்கிணங்க, ஒன்றிய அரசின் ஜவுளி அமைச்சகம் மற்றும்

இந்திய தொழில் கூட்டமைப்புடன்(CII) இணைந்து 17.11.2023 மற்றும் 18.11.2023 ஆகிய 2 நாட்களுக்கு கோயம்புத்தூரில் "தொழில்நுட்ப ஜவுளிக் கருத்தரங்கு" துணிநூல் துறையின் சார்பில் நடத்தப்படுகின்றது. தமிழ்நாட்டில் ஜவுளித் தொழில் அதிக வேலைவாய்ப்புகளை வழங்கும் தொழிலாக விளங்குகிறது. ஜவுளித் தொழிலின் எதிர்காலம் தொழில்நுட்ப ஜவுளித் துறையின் வளர்ச்சியை சார்ந்தே அமையும் என்பதை உணர்ந்த தமிழ்நாடு அரசு, ஜவுளித் துறைக்கு முன்னுரிமை அளித்து அதனை மேம்படுத்தும் பொருட்டு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

"2030-க்குள் தமிழகத்தின் பொருளாதாரத்தை 1 டிரில்லியன் அமெரிக்க டாலராக உயர்த்த வேண்டும்" எனும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உன்னத நோக்கத்தை செயல்படுத்தும் வகையில், தமிழ்நாடு அரசின் ஜவுளித் துறை பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. அவற்றில் ஒன்றாக கடந்த நவம்பர் 2022ல் சென்னையில் முதன் முதலாக பன்னாட்டு தொழில்நுட்ப ஜவுளிகள் கருத்தரங்கு நடைபெற்றது. அதன்தொடர்ச்சியாக இரண்டாவது தொழில்நுட்ப ஜவுளிகள் கருத்தரங்கு ஜவுளி நகரமான கோயம்புத்தூரில் நடைபெறுவது மிகவும் பொருத்தமாக உள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆற்றல்மிகு தலைமையில் ஜவுளித் தொழிலில், ஜவுளி தொழில்நுட்பத்திற்கு முக்கியத்துவம் அளித்து, பல்வேறு முன்னெடுப்புகளை இவ்வரசு மேற்கொண்டு வருகிறது. தமிழ்நாட்டில், ஜவுளி தொழில்நுட்ப வளர்ச்சியினை ஊக்கப்படுத்த சிறப்பான திட்டங்களை வகுத்து, தொழில் துறையினால் அரசாணை வெளியிடப்பட்டு உள்ளது. அவற்றில், ஜவுளி தொழில்நுட்பத்திற்கு பல்வேறு சலுகை அளிக்கப்பட்டுள்ளன. மேலும், நமது மாநில ஜவுளித் தொழில் மற்ற மாநிலங்களுடன் போட்டியிடும் வகையில், பல்வேறு சலுகைகள் அடங்கிய புதிய ஜவுளி கொள்கை விரைவில் வெளியிடப்படவுள்ளது. இந்தியாவில், தமிழ்நாட்டை, ஜவுளித்துறையில் முதன்மை மாநிலமாக உருவாக்கிட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அனைத்து நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள். அதன்பொருட்டு, சிறிய அளவிலான ஜவுளிப் பூங்கா அமைக்க முன்வரும் தொழில்முனைவோர்களுக்கு தகுதிவாய்ந்த திட்ட மதிப்பில் (பொது உள்கட்டமைப்பு வசதிகள், பொதுப் பயன்பாட்டுக்கான

கட்டிடங்கள்) 50 சதவீதம் அல்லது ரூ.2.50 கோடி இவற்றில் எது குறைவானதோ அது தமிழ்நாடு அரசின் மானியமாக வழங்கப்படுகிறது.. சேலத்தில் 119 ஏக்கரில் ரூ.881கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த ஜவுளி பூங்கா துவங்கப்படஉள்ளது. இதுபோன்ற பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

இக்கருத்தரங்கானது, தொழில்நுட்ப ஜவுளித்துறையின் வளர்ச்சிக்கான வாய்ப்புகள் மற்றும் சாத்தியக்கூறுகள் குறித்து தமிழ்நாட்டில் உள்ள தொழில்முனைவோருக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதோடு, தொழில்நுட்ப ஜவுளித் துறையில் தேசிய மற்றும் பன்னாட்டு முதலீட்டாளர்களை தமிழ்நாட்டிற்கு ஈர்க்கும். மேலும் இக்கருத்தரங்கின் வாயிலாக ஜவுளி தொழில்நுட்பம் தொடர்பான புதிய நுட்பங்கள், புதிய இயந்திரங்கள் மற்றும் துணைக்கருவிகளின் ஆராய்ச்சி மேம்படுவதோடு தொழில்நுட்ப ஜவுளி ஏற்றுமதிக்கான சந்தை வாய்ப்புகள் விரிவடையும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. தமிழகத்தின் பொருளாதாரத்தை 2030-க்குள் 1 டிரில்லியன் அமெரிக்க டாலராக உயர்த்த வேண்டும் என்கிற இலக்கினை அடைய இந்த கருத்தரங்கம் உறுதுணையாக இருக்கும் என உறுதியாக நம்புகிறேன் என மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திரு. ஆர். காந்தி அவர்கள் தெரிவித்தார்.

இக்கருத்தரங்கில் தொழில்நுட்ப ஜவுளிகள் சார்ந்த பிரத்யேக அமர்வுகளில் 16க்கும் மேற்பட்ட தொழில்நுட்ப வல்லுனர்கள் பங்கேற்று, தொழில்நுட்ப ஜவுளி மற்றும் ஜவுளித் துறை சார்ந்த தகவல்களை பகிர்ந்து கொண்டனர். இக்கருத்தரங்கில் தொழில்நுட்ப வல்லுநர்கள், ஜவுளித் தொழில்துறையினர் மற்றும் தொழில்முனைவோர் உட்பட 600க்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் பங்கேற்றனர். மேலும் 18.11.2023 அன்று SITRA மற்றும் PSG-Tech கோயம்புத்தூர்ஆகிய ஜவுளித்துறை சார்ந்த ஆராய்ச்சி மற்றும் கல்வி நிறுவனங்களில் மேற்கொள்ளப்படும் ஆராய்ச்சிகள் குறித்து அறிய ஜவுளித் தொழில் கூட்டமைப்பினர் பார்வையிட உள்ளனர்.

**வெளியீடு-செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கோயம்புத்தூர் மாவட்டம்**

---

கோயம்புத்தூர் மாவட்ட அரசு செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள:

collectorCoimbatore collectorCbe Pro Cbe cbe_pro prokovai22